


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (24.11.2016) நடைபெற்றது.

செ.வெ.எண் : 827/2016 நாள்: 24.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (24.11.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (24.11.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 22.11.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 15.15 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 30.90 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 7.21 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 7.31 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 9.50 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 40.27 அடியும் உள்ளது.

21.11.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 245.545 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 21.11.2016 முடிய 17,177 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 16,074 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 943 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 34,194 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 831 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2,796 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 872 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 4,499 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

காரங்காடு பாலத்தில் இருந்து வடக்கு நோக்கி தண்ணீர் செல்லும் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய பாதுகாப்பு கோரி காவல்துறைக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. உரிய பாதுகாப்பு கிடைத்தவுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் எனவும், மிடாலம் ஊராட்சி பகுதியில் தேவிகோடு சாலையில் உள்ள இடைக்கோடு குளம், பெருங்குளம் தூர்வாரவும், சீரமைக்கவும், நீர்வள, நிலவள திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அளித்து சீரமைக்கப்படும் எனவும், வில்லுக்குறி பேரூராட்சிக்குட்பட்ட மேலப்பள்ளம் ஊரில் தூவலாற்றின் குறுக்கே அமைந்துள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்த ரூ.30 இலட்சம் தேவை என மதிப்பிடப்படுகிறது. சிறப்பு நிதி கிடைக்கப்பெற்றால் பொதுப்பணித்துறை மூலம் பாலம் கட்டப்படும் எனவும், அனந்தனார் கால்வாய் ஞானதாசபுரம் கல்பாலத்தின் அருகில் உள்ள மடை சரி செய்யும் பொருட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், கண்ணமங்கலம் குளத்தில் பாசனத்துக்காக திருகு ஷட்டர் வரும் நிதியாண்டில் நிதி ஆதாரத்தை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தெங்கம்புதூர் கிராமம், பால்குளம் பகுதியில் உள்ள புறக்கால்வாயை தூர்வாரவும், தடுப்புச்சுவர் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், சுசீந்திரம் குளத்திற்கு தண்ணீர் வரும் கால்வாய் மற்றும் குளத்தின் நுழைவு வாயிலில் உள்ள ஆகாயத்தாமரை, செடிகளை அகற்ற தற்போது குளத்தில் முழு கொள்ளளவில் தண்ணீர் இருப்பதால் நீர் அடைப்பு காலமாகிய மார்ச் முதல் மே வரையுள்ள காலங்களில் துறையின் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப முன்னுரிமையின் அடிப்படையில்

பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், கட்டிமாங்கோடு கிராமம், தேவர்குளத்தின் மறுகால் ஓடை சரி செய்யும் பணிக்கு ரூ.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு பெறப்பட்டபின் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தனியார் உரக்கடைகளில் உரம் பற்றிய விலைப்பட்டியல் வைக்கவும், உரிய விலையில் உரங்களை விற்பனை செய்யவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் திரு. நா.இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை (நீர் ஆதரவு) செயற்பொறியாளர் பொறி சுப்பிரமணியன், வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.